**IN THE COURT OF THE I ADDITIONAL SUBORDINATE JUDGE, SALEM**

தேதி.10.08.2026

O.S.No. 295/2014

PW3- ராம்குமார்  த/பெ. ஆர்.வி. தியாகராஜன்

Solemnly affirmed in accordance to the provision of the OATHS ACT 1969, ACT NO.44 OF 1969.

**<u>6 மற்றும் 8 ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கு யார் யார் மீது போடப்பட்டுள்ளது என்றால் ரங்கநாதன் சன்னுமணியம்மாள் மீது ரோட்டை ஆக்கரமித்தற்காக போட்டுள்ளார். FMB அளவீடு தவறாக இருப்பதாகவும் சொல்லியுள்ளார். சன்னுமணியம்மாள் வகையருவுக்கும் ரங்கநாதன் வகையருவுக்கும் இவ்வழக்கு 23 வருடமாக நடக்கிறது. 2003 ல் சன்னுமணியம்மாள் ரங்கநாதன் மீது போட்ட வழக்கில் ரோடு அவருக்கு பாத்தியம் இருப்பதாக அவ.எண் 708/2003 ல் தீர்ப்பானது என்றால் சரிதான். அதன் மீது ரங்கநாதன் மேல்முறையீடு எண் 116/2010 என்ற வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். அதற்கு மேல் இரண்டாம் மேல்முறையீடான 534/2015 ம் தள்ளுபடியாகிவிட்டது என்றால் எனக்கு தெரியாது. வடக்கிலும் தெற்கிலும் உள்ள ரோட்டை ரங்கநாதன் ஆக்கரமிப்பு செய்திருப்பதாக வழக்கு போட்டார்கள் என்றால் சரிதான். அந்த ஆக்கிரமிப்பை எடுக்க வேண்டும் என்று தான் தீர்ப்பானது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. ஆனால் ஆக்கிரம்பு எதுவும் இல்லை. இந்த வழக்கை FMB அளவீடை மாற்ற வேண்டும் என்று கேட்டு தாக்கல் செய்துள்ளார். FMB ல் தவறு இருப்பதை எப்போது கண்டுபிடித்தேன் என்றால் october 2025. நான் FMB பிளானை மாற்ற வேண்டும் என்று கேட்டு மாவட்ட ஆட்சியரிடமோ, சர்வேயர் செட்டில்மெண்ட் அவர்களிடமோ மனு ஏதாவது கொடுத்தேனா என்றால் இல்லை. எனது வீட்டிற்கும் பிரதிவாதிகள் வீட்டிற்கும் வாதிகள் வீட்டிற்கும் வடக்கிலும் தெற்கிலும் செல்லும் ரோடு காலங்காலமாக 50 வருடமாக இருக்கிறது என்றால் சரிதான். என்னிடமிருந்து தான் ரங்கநாதன் விலைக்கு வாங்கினார் என்றால் சரிதான். மற்றொருவரான ஆர்.வி.செல்வராஜ்க்கும் மற்றொரு பகுதியை விற்றுள்ளேன். நான் பெற்ற கிரைய பத்திரத்தில் நிலவு அளவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் விற்ற நிலத்திற்கும் அளவுகள் காட்டியுள்ளேன் என்றால் சரிதான். நான் விற்ற நிலத்திற்கும் வாங்கிய நிலத்திற்கும் வடக்கிலும் தெற்கிலும் ரோடு எல்லையாக உள்ளது என்றால் சரிதான். நான் வாங்கிய அளவிற்கு அதிகமாக வாதிக்கு விற்றுவிட்டேன் என்பதால் தான் வாதிகள் வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. அதனால் நான் வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சாயப்பட்டறை தொழில் செய்கிறேன் என்றால் textile தொழில் செய்கிறேன். நான் வாதியுடன் கூட்டாக தொழில் செய்து வந்தேன் என்றால் சரிதான். FMB ஐ மாற்ற கேட்பதற்கு எனக்கு எந்த

அதிகாரமும் இல்லை என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அளவுகள் அதிகமாக வைத்திருப்பதால் என்னை காப்பாற்றிக் கொள்ள பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>1 முதல் 5 பிரதவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

எந்த சர்வே எண்ணை மாற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் FMB அளவீடை மாற்ற சொல்லி கேட்டுள்ளார். FMB நிலம் வாதிக்கு பாத்தியப்பட்டதா அல்லது அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்டதா என்பது எனக்கு தெரியுமா என்றால் வாதிக்கு தான் பாத்தியப்பட்டது. அது சம்மந்தப்பட்ட என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்ற சங்கதி எனக்கு தெரியாது. வழக்கு விவரங்கள் பற்றி எதுவும் தெரியாமல் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கேட்டுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence
and hearing, and under my personal directions
and super intendance and interpreted to the witness
in the presence of the accused and admitted by
the witness to be correct.

Sd/-Ramkumar

Sd/-K.Ambika
I Additional Subordinate Judge,
Salem.